முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

கள்ளக்குறிச்சி

OS.21/2024

தேதி - 21.03.2024 PW2- நடேசன்

குறுக்கு விசாரணை

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பாக வழக்கு போட்டுள்ளதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் கையெழுத்து போடும்படி கேட்டுக்கொண்டதால் போட்டேன். வழக்கு சொத்து விபரம் எனக்கு தெரியாது. குப்புசாமியை தெரியும். அவர் இறந்து விட்டார். சுமார் 7,8 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். அவருடைய மனைவி காசாம்பு குப்புசாமி இறப்பிற்கு முன்பே இறந்துவிட்டார். குப்புசாமியின் அப்பா பெயர் முத்தையா. முத்தையா 30 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது எனக்கு வயது 30. தற்போது என்னுடைய வயது 72. முத்தையாவிற்கு குப்புசாமி மற்றும் மாரிமுத்து 2 மகன்கள் மட்டுமே. மாரிமுத்து 4 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். மாரிமுத்துவும் குப்புசாமியும் தனித்தனி குடும்பமாக இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல., முத்தையா கவுண்டரின் தகப்பனார் பெயர் தெரியாது. முத்தையா கவுண்டர் ஆடு, மாடுகளை மேய்த்து வந்தார். மாரிமுத்து விவசாய தொழில் செய்து வந்தார். மாரிமுத்து அவர் பெயரில் எந்த சொத்தும் கிரையம் வாங்கவில்லை. முத்தைய கவுண்டருக்கு 3 ஏக்கர் இருந்தது அந்த சொத்து அவர் வாங்கினாரா பூர்வீகத்தில் வந்ததா என்று எனக்கு தெரியாது. அச்சொத்தை முத்தைய கவுண்டர் வாங்கினாரா என்பதை பற்றி எனக்கு தெரியாது. முத்தைய கவுண்டர் பட்டா இருந்ததா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் குப்புசாமி பெயரில் உள்ளது. அவைகளை குப்புசாமி கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். கும்பலாக வாங்கப்பட்டது. குப்புசாமி பெயரில்தான் கிரையம், பட்டாவும் அவர் பெயரில்தான் உள்ளது. குப்புசாமி எந்த ஆண்டு தாவா சொத்துக்களை கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கினார், கிரையத்திற்கு நான் போகவில்லை, சாட்சி கையொப்பமும் போடவில்லை. அவர் பெயரில் எத்தனை கிரைய பத்திரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது

என்று எனக்கு தெரியாது. குப்புசாமி சொசைட்டியில் வைஸ் பிரசிடென்டாக இருந்தார். 1 முதல் 3 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரவாதி கவுன்சிலராகவும், பிரசிடென்டாகவும் இருந்தார். கான்டாராக்டர் தொழிலும் செய்தார் என்று சொன்னால் சரிதான். அவர் 1991 முதல் 2016 வரை கவுன்சிலராக இருந்தார். அவருடைய மனைவி ராஜேஸ்வரி மாவட்ட கவுன்சிலராக உள்ளார். 3 ம் பிரதிவாதி குன்னத்தூரில் வைஸ் பிரசிடென்ட். குப்புசாமி பெயரில் உள்ள பட்டா விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளதா என்று தெரியாது. குப்புசாமி கான்ராக்டர் தொழில் செய்து வந்தார். அவருடைய நிலத்திலும் விவசாயமும் செய்து வந்தார். தாவா சொத்தின் சர்வே எண். தெரியாது ஆனால் அதில் கம்பு விளைந்தது. கம்பு ஒரே போகம். குப்புசாமி உயிருடன் இருந்த வரையில் மாரிமுத்துவோ அவருடைய மனைவி நடையம்மாளோ பாகம் கேட்கவில்லை. அவருடைய மகள் மலர்வேணியும் பாகம் கேட்கவில்லை. மலர்வேணி ராஜாவின் மகனை திருமணம் செய்துகொண்டுள்ளார். மாரிமுத்துவின் சங்கர் 20 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். மற்றொரு மகன் கலியன் 1995 ல் இறந்துவிட்டார். மாரிமுத்து பெயரில் ஏலம் எடுத்த சொத்து மட்டும்தான் உள்ளது. திருக்கோவிலூரில் சொத்து உள்ளது. அந்த சொத்து சுமார் 4 அல்லது 3 ஏக்கர் இருக்கும். அந்த சொத்தை கும்பலாக அனுபவித்து வருகிறார்கள். அந்த சொத்தின் பட்டா எண். தெரியாது, சர்வே எண்ணும் தெரியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ரூ.800 க்கு ஏலம் எடுக்கப்பட்டது. 1ம் வாதி என்னை சாட்சியம் அளிப்பதற்காக அழைத்து வந்தார். குப்புசாமியும், மாரிமுத்துவும் எந்த காலத்திலும் கூட்டாக இருந்ததில்லை என்றும் மாரிமுத்து ஆடு, மாடுகளை மேய்த்து வந்தார் என்றும் மேலும் புரோக்கர் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சுமார் 50 அயிட்டத்திற்கு மேல் உள்ளது. ஒவ்வொரு தேர்தலிலும் குப்புசாமிக்கும், ராஜாவுக்கும் எதிர்த்து நான் வேலை செய்தேன்எ ன்றால் சரியல்ல, அவர்களுக்கு ஆதரவாக நான் வேலை செய்தேன். நான் அவர்களுக்கு விரோதமாக வேலை செய்ததால் 1ம் வாதிக்கு

ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்துவுக்கும் குப்புசாமிக்கும் எந்த காலத்திலும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.